# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 13 வெள்ளிக்கிழமை 29.08.2025 கதிர் 300



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
Yarl Muttram
Youtube Channel






## கிளிநொச்சி விபத்தில் இரு இளைஞர்கள் பலி!

கிளிநொச்சி, ஓக. 29

கிளிநொச்சியில் இன்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து நுவரெலியா நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ், பரந்தன் அரச விதை உற்பத்தி நிலையம் முன்பாக இருந்த பஸ் தரிப்பிடத்தில் பஸ்ஸை நிறுத்திய போது, பின்னால் வந்த டிப்பர் ரக வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து பஸ்ஸ/டன் மோதி விபத்துக்குள்ளானது.

அதன்போது, டிப்பர் வாகனத்துக்குப் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் டிப்பர் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில், மோட்டார் சைக்கிளில் சென்ற இரு இளைஞர்களில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த

7➤

# சர்வதேச நீதி கோரி கையெழுத்து வேட்டை

## வடக்கு, கிழக்கில் இன்று ஆரம்பம்





யாழ்ப்பாணம், ஓக. 29

இலங்கையின் வடக்கு, கிழக்கில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழிகள் மற்றும் தமிழினப் படு கொலைகளுக்குச் சர்வதேச நீதி கோரி கையெழுத்துப் போராட்டம் தமிழர் தாயகத்தில் இன்று ஆரம்பமானது.

இதன் பிரதான நிகழ்வு யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம் முன்பாக இன்று காலை நடைபெற்றது.

செம்மணி உட்பட இலங்கையின் வடக்கு, கிழக்கு மண்ணில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழிகள் மற்றும் நடைபெற்ற தமிழினப் படுகொலை களுக்கு நீதியைக் கோருவதற்காகத் தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் கையெழுத்துச் சேகரிக்கும் செயற்பாடு வடக்கு, கிழக்கு மாகாணங்க ளின் பல பகுதிகளிலும், இன்று ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அந்தவகையில் கையெழுத்துச் சேகரிக்கும் செயற்பாட்டின் பிரதான நிகழ்வு யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம் முன்பாக இன்று முன்னெடுக்கப்பட்ட நிலையியில் அதில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரமுகர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## நாவற்குழியில் காணாமல்போனோர் வழக்கு: மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது தீர்ப்புத் திகதி




தென்மராட்சி, ஓக. 29

தென்மராட்சி, நாவற்குழிப் பகுதியில் கடந்த 1996ஆம் ஆண்டு இராணுவத்தின் சுற்றிவளைப்பு நடவடிக்கையின் பின்னர் காணாமல் ஆக்கப்பட்ட 24 இளைஞர்கள் தொடர்பான வழக்கு தீர்ப்புக்காக

7➤

## ராஜித விளக்கமறியலில்



கொழும்பு, ஓக. 29

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இன்று ஆஜரான முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 9ஆம் திகதி வரை விளக்கமறிய லில் வைக்குமாறு

7➤

## முல்லைத்தீவில் கையெழுத்துப் போராட்டம்



முல்லைத்தீவு, ஓக. 29

செம்மணி உட்பட இலங்கையின் வடக்கு, கிழக்கு மண்ணில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழிகள் மற்றும் நடைபெற்ற தமிழ் இனப்படுகொலைகளுக்குச் சர்வதேச நீதியைக் கோரும் வகையில் தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் இடம்பெறும் கையெழுத்துச் சேகரிக்கும் செயற்பாடு

7➤


## வவுனியாவில் நடைபெற்ற கையெழுத்துப் போராட்டம்



வவுனியா, ஓக. 29

செம்மணி உள்ளிட்ட வடக்கு, கிழக்கு மனிதப் புதைகுழிகள் மற்றும் இனப படுகொலைக்குச் சர்வதேச நீதி கோரி வவுனியாவில

7➤




# இலங்கை மத்திய வங்கி ஆளுநருக்கு ‘ஏ’ தர மதிப்பீடு

கொழும்பு, ஓக .29

இலங்கை மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, குளோபல் ஃபைனான்ஸின் 2025 ஆம் ஆண்டுக்கான மத்திய வங்கியாளர் அறிக்கை அட்டைகளில் (புடழடியட குயைெஉந'ள ஊநவெசயட டீயமெநச சுநிழசவ ஊயசனள 2025) உயரிய ‘ஏ’ தர மதிப்பீட்டைப் பெற்றுள்ளார்.

இந்த அங்கீகாரம் அவரை உலகின் மரியாதைக்குரிய மத்திய வங்கி ஆளுநர்களின் பட்டியலில் இடம்பெறச் செய்துள்ளது.

இலங்கை எதிர்கொண்ட கடுமையான பொருளாதார நெருக்கடியின் போது, நாட்டின் பொருளாதாரத்தை நிலைப்படுத்துவதில் அவரது விதிவிலக்கான பங்களிப்பு மற்றும் மூலோபாய அறிவு ஆகியவை இந்த ‘ஏ’ தர மதிப்பீட்டிற்கு காரணமாக அமைந்துள்ளன.

1994 முதல் நடத்தப்படும் இந்த வருடாந்திர மதிப்பீடு, உலகின் சுமார் 100 முன்னணி நாடுகளின் மத்திய வங்கி ஆளுநர்களை ஆய்வு செய்கிறது.

பணவீக்கக் கட்டுப்பாடு, பொருளாதார வளர்ச்சி இலக்குகள், பண நிலைத்தன்மை, வட்டி விகித மேலாண்மை மற்றும் அரசியல் சுதந்திரம் ஆகிய துறைகளில் வெற்றியின் அடிப்படையில், ‘ஏ’ முதல் ‘எஃப்’ வரையிலான தரங்களில் ஆளுநர்களின் செயல்பாடு மதிப்பிடப்படுகிறது.

# மோசடி வலைத்தளங்கள் குறித்து எச்சரிக்கை!

கொழும்பு, ஓக .29

தனிப்பட்ட, நிதித் தகவல்களைத் திருடுவதற்காக அதிகாரப்பூர்வ வங்கி இணையதளங்களைப் பின்பற்றும் மோசடி வலைத்தளங்கள் குறித்து விழிப்புடன் இருக்குமாறு இலங்கையின் பல வங்கிகள் வாடிக்கையாளர்களை வலியுறுத்தியுள்ளன.




இந்த வாரம் வெளியிடப்பட்ட அறிவிப்புகளின்படி, மோசடி செய்பவர்கள் மின்னஞ்சல்கள் மற்றும் குறுஞ்செய்திகள் மூலம் இணைப்புகளைப் பரப்பி, எழுத்துப்பிழைகள் அல்லது அசாதாரண எழுத்துக்களைக்கொண்ட போலி வலைத்தளங்களுக்கு பயனர்களை வழிநடத்துகிறார்கள்.

வாடிக்கையாளர்கள் அத்தகைய இணைப்புகளைக் கிளிக் செய்வதைத் தவிர்த்து, அதிகாரப்பூர்வ வலைத்தள முகவரிகளை நேரடியாக தட்டச்சு செய்து அணுகுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

உள்நுழைவு சான்றுகள் போன்ற முக்கியமான விவரங்களை உள்ளிடுவதற்கு முன்பு தனிநபர்கள் ருசுடுகளை கவனமாகச் சரிபார்க்க வேண்டும் என்றும், சந்தேகத்திற்கிடமான எந்தவொரு செயல்பாடு குறித்தும் உடனடியாகப் முறையிட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளனர்.

# மூங்கிலாறு பகுதியில் வயோதிபப் பெண் சடலமாக மீட்பு!

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மூங்கிலாறு பகுதியில் வயோதிபப் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 84 வயதுடைய கோபாலன் குண்டுமணி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த வயோதிப பெண் மூங்கிலாறு பகுதியில் உள்ள வீட்டில் உயிரிழந்த நிலையில் காணப்பட்டதை அவதானித்தவர்கள், புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டதுடன், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதவான் தர்மலிங்கம் பிரதீபன் சம்பவ இடத்திற்கு வருகை தந்து சடலத்தைப் பார்வையிட்ட பின்னர், உடற்கூறு பரிசோதனைக்குப் பின் உடலை உறவினர்களிடம் ஒப்படைக்க உத்தரவிட்டார்.

குறித்த நபர் தற்கொலை செய்துகொண்டாரா அல்லது வேறு காரணங்களால் உயிரிழந்தாரா என்பது தொடர்பில் தகவல்கள் வெளியாகவில்லை.

இது குறித்த மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பிடத்தக்க விடயமாக, இதே மூங்கிலாறு பகுதியில், நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் பாலியல் துன்புறுத்தலுக்குள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட ஒரு இளம்பெண்ணின் சடலம் மீட்கப்பட்ட அதே வீட்டிலேயே இந்தச் சம்பவமும் இடம்பெற்றுள்ளது.



# வடக்கு மாகாணத்தின் விசேட மகளீர் சிகிச்சை மையத்தை செயற்படுத்துமாறு கோரி போராட்டம்







கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை வளாகத்தில், வடக்கு மாகாணத்திற்கான விசேட மகளீர் சிகிச்சை மையம் அமைக்கப்பட்டு நீண்ட காலமாக இயங்காமல் இருப்பதனை கண்டித்தும், ஆதனை விரைவாக செயற்படுத்த கோரியும் கண்டன போராட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை வளாகத்தில் இன்று கண்டன போராட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வார்ப்பாட்டம் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்டது.

நெதர்லாந்து அரசாங்கத்தின் பல மில்லியன் ரூபா நிதியில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள வடக்கு மாகாணத்திற்கான விசேட மகளீர் சிகிச்சை மையமானது அதி நவீன வசதிகளுடன் நவீன மருத்துவ உபகரணங்களுடனும் அமைக்கப்பட்டு 2024 மே மாதம் அன்றைய ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த சிகிச்சை மையம் திறக்கப்பட்டு ஒரு வருடத்தினை கடந்தும் இன்று வரை எந்தவொரு செயற்பாடும் இன்றி காணப்படுகிறது.

இந்த சிகிச்சை மையத்தில் இரண்டு மகப்பேறு மற்றும் பிரசவ விடுதிகள், பெண் நோயியல் விடுதிகள், நவீன வசதிகள் கொண்ட அறுவை சிகிச்சை கூடம், மகப்பேறு தீவீர சிகிச்சைப் பிரிவு, கருவள பெருக்கம் சிகிச்சைப் பிரிவு, நோயாளர் கிளினிக் வளாகம் போன்றவற்றை கொண்டு அமைந்ததுள்ளது.

எனவே இந்த சிகிச்சை மையம் செயற்பாடுகளை ஆரம்பிக்கும்போது இதுவரை காலமும் வடக்கு மாகாண்தில் இருந்து மேற்படி சிகிச்சைகளுக்கு கொழும்புக்கும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் கடும் சிரமங்களுக்கு மத்தியில் சென்று வந்த பெண்கள் தங்களது காலடியிலேயே சிகிச்சை பெறும் சூழல் உருவாகும்.

இதனை தவிர வடக்கு மாகாண பெண்கள் மட்டுமன்றி எமது மாகாணத்தின் அருகில் உள்ள மாகாண பெண்களும் இதன் பயனை பெறுவார்கள்.

எல்லா வசதிகளும் இருந்தும் தாதியர்கள் உள்ளிட்ட ஆளனி வளம் இன்மையே இந்த சிகிச்சை மையத்தை இயங்க வைக்க முடியாதுள்ளது. தொடர்ச்சியாகசெயற்பாடின்றி காணப்படுமாயின் இங்குள்ள பெறுமதிக்க மருத்துவ உபகரணங்கள் கூட பழுதடைய கூடிய வாய்ப்புக்கள் ஏற்படும்.

அத்தோடு, இந்த மருத்துவ உபகரணங்களின் பயன்பாடு இன்மையை காரணம் காட்டி, நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள மருத்துவமனைகளுக்கு இந்த உபகரணங்களை வழங்குவதற்கான முயற்சிகளும் இடம்பெறுகிறது. வடக்கு வாழ் மக்களுக்கு என வழங்கப்பட்ட இந்த மருத்துவ உபகரணங்களை எக்காரணம் கொண்டு வெளியில் எடுத்துச் செல்ல அனுமதிக்க போவதில்லை என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இவ்வார்ப்பாட்டத்தின் கோரிக்கைகள் அடங்கிய மகஜர்கள் வடக்கு மாகாண ஆளுநர், மத்திய சுகாதார அமைச்சர், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஐ)

## எமது உறவுகளுக்கு நீதி கிடைக்க வேண்டும்



எமது இனத்தை அழித்தவர்கள், உறவுகளை காணாமல் ஆக்கியவர்கள் அதற்கு எதிரான விசாரனையை முன்னெடுக்க அருகதையற்றவர்கள் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

செம்மணி உள்ளடங்களாக இலங்கையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள மனித புதைகுழிகளுக்கும், இனப்படுகொலைகளுக்கும் சர்வதேச நீதி கோரி கையெழுத்துப் போராட்டம் தமிழ் தேசிய கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் இன்றைய தினம் காலை மன்னார் நகர பேருந்து தரிப்பிடத்தில் இடம் பெற்றது.

இதன் போது தலைமை தாங்கி உரை நிகழ்த்துகையில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐ.நா சபையினுடைய கதவை தட்டியது மக்களினதும், போராளிகளினதும் தியாகம் என்பதை நாம் ஒரு ஒருபோதும் மறந்து விட முடியாது.

இன்று வடக்கு கிழக்கில் எங்கு தோண்டினாலும் தமிழர்களுடைய மனித எலும்புக்கூடுகள் வெளி வருகிறது. வடக்கு கிழக்கில் பல்வேறு இடங்களில் மனித புதைகுழிகள் காணப்படுகின்றது.

முதல் முறையாக மனித எலும்புக்கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டது மன்னாரிலே.அதனை தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் மனித புதைகுழி கண்டு பிடிக்கப்பட்டது. தற்போது யாழ்ப்பாணத்தில் கூடுதலான மனித எலும்புக்கூடுகள் உள்ள மனித புதைகுழி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமை மீறல் சம்மந்தமாக செயல்பட்டவர்கள் தண்டிக்கும் வகையில் சர்வதேச நீதிமன்றத்தில் அவர்களுக்கு தண்டனை வழங்குகின்ற நிலைப்பாட்டை கொண்டு வருவதற்கான வாய்ப்பை ஏற்படுத்துகின்ற வகையில் குறித்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றது.

மன்னார் மறைமாவட்டத்தின் முன்னைநாள் ஆயர் அமரர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை ஏற்கனவே கூறியது, இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்ட மக்களின் உண்மை தொகையை ஐ.நா.சபை வரை சென்றுள்ளது.

இன்று வரை அவரது எண்ணிக்கையே அங்கும் உள்ளது. அவ்வாறான ஒரு சூழலில் ஆயர் கூறிய வார்த்தை கள்ளர்கள் கள்ளர்களை விசாரணை செய்ய முடியாது என்றது போல எங்களுடைய இனத்தை அழித்தவர்கள், எமது உறவுகளை காணாமல் ஆக்கியவர்கள், இனத்தை இல்லாது செய்கின்ற சிந்தனையுடன் உள்ளவர்கள் அதற்கு எதிரான விசாரனையை முன்னெடுக்க அருகதையற்றவர்கள் என்பதை நாங்கள் உணர்ந்தவர்களாக இருக்கிறோம்.

இந்த கையெழுத்து வேட்டை ஐ.நா.வரைக்கும் சென்று எமக்கு நீதியாக மாற வேண்டும்.எம் உறவுகளுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காக இந்த கையெழுத்து வேட்டையை ஆரம்பித்துள்ளோம். வடக்கில் இன்றைய தினம் வெள்ளிக்கிழமை (29) குறித்த கையெழுத்து வேட்டை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிழக்கில் பிரிதொரு தினத்தில் இடம் பெறும்.பல ஆயிரக்கணக்கான கையெழுத்துக்களை பெற்றுக் கொள்வதன் மூலம் எமது இலக்கை அடைய முடியும்.இதனூடாகவே எமது கோரிக்கையை சர்வதேசத்திற்கு தெரிவிக்க முடியும்.என அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த கையெழுத்து போராட்டத்தில் அருட் தந்தையர்கள்,உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள்,பொது மக்கள்,மனித உரிமை செயல்பாட்டாளர்கள் உள்ளடங்களாக பலர் கலந்து கொண்டு கையெழுத்திட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## முன்னாள் எம்.பி. நிமல் லான்சா செப்டெம்பர் 12 வரை மறியலில்

*நீர்கொழும்பு, ஓக. 29*

*கம்பஹா மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சாவை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.*

*முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா நீர்கொழும்பு, கொச்சிக்கடை பொலிஸ் நிலையத்தில் இன்று சரணடைந்த நிலையில் உடனடியாகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.*

*2006 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தாக்குதல் நடத்துதல் மற்றும் ஆயுதங்களைப் பயன்படுத்தல் உள்ளிட்ட குற்றச்சாட்டின் பேரில் நிமல் லான்சா கைது செய்யப்பட்டார்.*

*அவர் நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 12 ஆம் திகதி வரை விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.*

## யாழில் நிறைவுக்கு வந்துள்ள அரச பேருந்து ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பு!

*யாழ்ப்பாணத்தில் அரச பேருந்து ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பு நிறைவுக்கு வந்துள்ளது.*

*இலங்கை போக்குவரத்து சபையின் தொழிற்சங்கங்கள் முன்னெடுத்திருந்த பணிப்பகிஷ்கரிப்பு பயணிகளுக்கு பெரும் இடையூறை ஏற்படுத்தியிருந்த நிலையில், தேசிய மக்கள் சக்தியின்* **(NPP)** *யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கருணைநாதன் இளங்குமரன் யாழ் அரச பேருந்து சாலை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தையை நடாத்தியிருந்தார்.*

*அரச பேருந்து சாலை அதிகாரிகளுடன் நடாத்திய பேச்சு வார்த்தை மூலம் ஊழியர்களின் கோரிக்கைகளை பரிசீலித்து தீர்வு காண இளங்குமரன் எம்.பி முயற்சித்தார்.*

*இதன் விளைவாக இன்று (29) காலை 10:00 மணியளவில் அரச பேருந்து ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பு நிறைவுக்கு வந்துள்ளதுடன், யாழ்ப்பாணத்தில் அனைத்து அரச பேருந்து சேவைகளும் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.*

# திமுக அரசின் பேட்ச் வொர்க் போல இல்லை முதல்வருக்கு அண்ணாமலை பதில்

திமுக அரசு செய்யும் பேட்ச் வொர்க் போல் இல்லாமல், மத்திய அரசு வரி விதிப்பு விவகாரத்தில் ஏற்கனவே நடவடிக்கையை துவங்கி விட்டதாக முதல்வர் ஸ்டாலினுக்கு பாஜ முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை பதிலளித்துள்ளார்.

அமெரிக்கா விதித்த 50 சதவீத வரி அமலுக்க வந்த நிலையில், ஜவுளி பொருட்களை பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான முயற்சிகளை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது. இதற்காக, 40 நாடுகளில் தூதரக அலுவலகத்தின் மூலம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது.

இதனிடையே, அமெரிக்க வரியால் 3 ஆயிரம் கோடி ஜவுளி வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், தொழிலாளர்களுக்கு உடனடி நிவாரணம் மற்றும் சலுகைகளை மத்திய அரசு வழங்க வேண்டும் என்று பிரதமர் மோடிக்கு முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்தியிருந்தார்.

இந்த நிலையில், பாஜ முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை, ஜவுளி பொருட்களை 40 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் மத்திய அரசின் நடவடிக்கை தொடர்பான செய்தியை குறிப்பிட்டு, பதிலளித்துள்ளார்.

அதில், விடுத்துள்ள பதிவில் தமிழகத்தில் திமுக அரசு செய்யும் பேட்ச் வொர்க் போல் இல்லாமல், மத்திய அரசு வரி விதிப்பு விவகாரத்தில் ஏற்கனவே நடவடிக்கையை துவங்கி விட்டது.

அதேவேளையில், காரணமே இல்லாமல் உயர்த்தப்பட்ட மின்கட்டணத்தை குறைக்க வேண்டும் என்று முதல்வர் ஸ்டாலினுக்கு கோரிக்கை விடுக்கிறேன், இவ்வாறு கூறினார். (ஐ)





## பயங்கரவாதிகளின் கூடாரமாக மாறி வரும் பூம்பாறை

கொடைக்கானல் அருகேயுள்ள அழகிய சுற்றுலா பகுதியான பூம்பாறை, பயங்கரவாதிகளின் கூடாரமாக மாற்றி வருவதால், அங்கு தேசிய புலனாய்வு நிறுவனமான, என்.ஐ.ஏ., அதிகாரிகள் முகாமிட்டுள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் அருகே, பூம்பாறை என்ற அழகிய கிராமம் உள்ளது. ரம்மியான சூழலில் உள்ள பூம்பாறை கிராமத்தை, தடை செய்யப்பட்ட, பி.எப்.ஐ., எனும், 'பாப்புலர் பிரன்ட் ஆப் இந்தியா' அமைப்பை சேர்ந்த பயங்கரவாதிகள், தங்களின் புகலிடமாக மாற்றி வருகின்றனர்.

தஞ்சாவூர் மாவட்டம் திருப்புவனத்தில், மத மாற்றத்திற்கு எதிராக செயல்பட்ட ராமலிங்கத்தை கொலை செய்ய, பூம்பாறையில் தான் பயங்கரவாதிகள், 2019ல் திட்டம் தீட்டி உள்ளனர். இந்த கொலை வழக்கில் தேடப்பட்டு வரும், பி.எப்.ஐ., முன்னாள் நிர்வாகிகளான சாகுல் ஹமீது, நபீல்ஹாசன் உள்ளிட்ட ஐந்து பேரும் இங்கு தான் பதுங்கி உள்ளனர்.

இவர்களுக்கு கொடைக்கானல் பில்லிஸ் வில்லா பகுதியில், பிரியாணி கடை நடத்தி வந்த இம்தாத்துல்லா,35, அடைக்கலம் கொடுத்துள்ளார்.

இவர், இரு தினங்களுக்கு முன் கைது செய்யப்பட்டார். பூம்பாறையில் உள்ள சில நபர்கள் மீது சந்தேகம் எழுந்துள்ளது. அவர்களை ரகசியமாக கண்காணித்து வருகிறோம்.

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தை சேர்ந்த முகமது யாசின் மற்றும் திண்டுக்கல் பேகம்பூரை சேர்ந்த அப்துல்லா ஆகியோரும், விசாரணை வளையத்திற்குள் கொண்டு வரப்பட்டு உள்ளனர். இவ்வாறு அவர்கள் கூறினர். (ஐ)

## வரும் 30ல் மாநாடு நடத்தி மரங்களோடு பேசுகிறார் சீமான்

நாம் தமிழர் கட்சி சார்பில், வரும் 30ம் தேதி 'மரங்களோடு பேசுவோம்' மாநாடு நடக்க உள்ளது.

நா.த.க., சார்பில் நடத்தப்பட்ட, ஆடு, மாடுகள் மாநாடு, மக்களிடையே பேசு பொருளானது. இதைத் தொடர்ந்து, திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி அருகே, அருங்குளம் கூட்டுச்சாலை, மனிதநேய பூங்கா வெற்றி தோட்டத்தில், வரும் 30ம் தேதி, மரங்கள் மாநாடு நடக்க உள்ளது.



இம்மாநாட்டில் நா.த.க., தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் பங்கேற்று, 'மரங்களோடு பேசுவோம் மரங்களுக்காக பேசுவோம்' என்ற தலைப்பில் பேச உள்ளார்.

மாநாடு நடக்கும் இடத்துக்கு சில நாட்களுக்கு முன் சென்ற சீமான், அங்கிருக்கும் மரங்களை பார்த்து பேசியதோடு, அவற்றுக்கு முத்தம் கொடுத்து மகிழ்ந்தார். (ஐ)

## விடியல் எங்கே? திமுகவின் நிறைவேற்றப்படாத வாக்குறுதிகள் பட்டியல் போட்ட அன்புமணி

*தேர்தல் வாக்குறுதிகள் 90 சதவீதத்தை பூர்த்தி செய்து விட்டதாக முதல்வர் ஸ்டாலின் கூறி வரும் நிலையில், திமுகவின் நிறைவேற்றப்படாத வாக்குறுதிகள் என்று முதல் பகுதியை பாமக செயல் தலைவர் அன்புமணி வெளியிட்டுள்ளார்.*

*பகுதி 1 என்று குறிப்பிட்டு அவர் வெளியிட்ட அறிக்கை*

*1.அரசியலமைப்புச் சட்டத்தின் பொதுப் பட்டியலில் உள்ள கல்வித் துறையை மீண்டும் மாநில பட்டியலுக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும். (வாக்குறுதி எண் – 2)*

*2.தமிழ் உள்ளிட்ட அனைத்து மாநில ஆட்சி மொழிகளிலும் தேசிய ஆட்சி மொழிகளாக நடைமுறைப்படுத்தும்படி மத்திய அரசை வலியுறுத்தப்படும். (வாக்குறுதி எண் – 4)*

*3.தமிழகத்தில் உள்ள மத்திய அரசு அலுவலகங்களில் தமிழை இணை ஆட்சி மொழியாக பிரகடனம் செய்ய மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்தும். (வாக்குறுதி எண் – 5)*

*4.சென்னை உயர்நீதிமன்றத்தின் வழக்காடு மொழியாக தமிழை அறிவிக்க வேண்டும் சென்னையில் உச்சநீதிமன்ற கிளை அமைக்க வேண்டும் என்று மத்திய அரசை தமிழக அரசு தொடர்ந்து வலியுறுத்தும். (வாக்குறுதி எண் – 6)*

*5.சென்னையில் அமைக்கப்பட்டுள்ள செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கு தன்னாட்சி அதிகாரம் பெற்று புதிய பொலிவுடன் சென்னையில் செயல்பட நடவடிக்கை எடுக்கப்படும். திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்க மத்திய அரசை திமுக அரசு வலியுறுத்தும்.(வாக்குறுதி எண் – 7)*

*6.உலகில் உள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் தமிழ் இருக்கைகளை ஏற்படுத்த படிப்படியாக நடவடிக்கைகள் எடுக்கப்படும். (வாக்குறுதி எண் – 8)*

*7.தூய தமிழ் எழுத்து வரி வடிவத்தை மட்டுமே அனைவரும் பயன்படுத்துவதை கட்டாயமாக்க சட்டம் இயற்றப்படும் அனைத்து அரசு அலுவலகங்களிலும் தமிழ் அலுவல் மொழிப் பிரிவு ஏற்படுத்தப்படும். (வாக்குறுதி எண் – 11)*

*8.அனைத்து அரசு அலுவலகங்களிலும் தமிழ்மொழியின் பயன்பாட்டை உறுதி செய்வதற்காக தமிழ் அலுவல் மொழி வளர்ச்சிப் பிரிவு ஏற்படுத்தப்படும். (வாக்குறுதி எண் –12)*

*இலங்கை போர்க் குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணைக்கு ஆணையிடும்படி உலக நாடுகளுக்கு அழுத்தம் தர வேண்டும் என்று மத்திய அரசை, திமுக தொடர்ந்து வலியுறுத்தும். (வாக்குறுதி எண் ரூ 13)*

*10.தனித் தமிழீழம் அமைப்பது குறித்து ஐ.நா. அவை மூலம் உலகெங்கும் வாழும் ஈழத் தமிழர்களிடம் பொது வாக்கெடுப்பு நடத்த நடவடிக்கை எடுக்கும்படி மத்திய அரசை திமுக தொடர்ந்து வலியுறுத்தும். (வாக்குறுதி எண் –14)*



*11ரூ12.ஈழத் தமிழர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்க மத்திய அரசை திமுக அரசு வலியுறுத்தும் இலங்கைக்குத் திரும்பிச் செல்ல விரும்பும் தமிழர்களுக்கு தேவையான உதவிகள் செய்யப்படும். (வாக்குறுதி எண் – 15, 16)*

*13.லோக் அயுக்தா அமைப்பை முறைப்படுத்தி முழுமையாக்க நடவடிக்கை எடுக்கப்படும். எம்எல்ஏக்கள், அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் மீதான குற்றங்கள் விரைந்து விசாரிக்கப்பட்டு தண்டனை வழங்கப்படும். (வாக்குறுதி எண் –18)*

*14.மக்களுக்குத் தேவையான அரசின் சேவைகள் குறித்த நேரத்தில் கிடைக்க சேவை உரிமைச் சட்டம் இயற்றி செயல்படுத்தப்படும். (வாக்குறுதி எண் –19)*

*15.ஊழல் செய்வோர் மீது சட்டவிதிகளின் படி நடவடிக்கை எடுக்கப்படும். (வாக்குறுதி எண் – 20)*

*16.ஊழலில் ஈடுபட்ட முன்னாள் அமைச்சர்கள் மீதான புகார்களை விரைந்து விசாரித்துத் தீர்ப்பு வழங்க சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்படும். (வாக்குறுதி எண் – 21)*

*17.முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் மரணத்தில் உள்ள மர்மம் குறித்து திமுக ஆட்சியில் முறையான விசாரணை நடத்தி, தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக கப்படுவார்கள். (வாக்குறுதி எண் – 22)*

*18.கலெக்டர், வட்டாட்சியர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகிய அதிகாரிகள் தங்கள் வலைதளத்தில் எம்பிக்கள், எம்எல்ஏக்கள் மற்றும் பொது மக்களின் மனுக்கள் மீது வைத்த கோரிக்கைகள் ஃ கடிதங்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விவரங்களைப் பதிவிட நடவடிக்கை எடுக்கப்படும். (வாக்குறுதி எண் ––23)*

*19.அரசு நிர்வாகத்தில் சிக்கன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அமைச்சர்கள், அதிகாரிகளின் தேவையற்ற செலவுகள், பயணங்கள் தவிர்க்கப்பட்டு, செலவு கட்டுப்படுத்தப்படும். (வாக்குறுதி எண் – 24)*

*20.தமிழகத்தில் செயல்படும் 83 பொதுத் துறை நிறுவனங்களையும் சீரமைத்து இலாபத்தில் இயங்கச்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். (வாக்குறுதி எண் – 26)*

*தொடரும்.. இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (ஐ)*



# சிக்கனமும் சிறு சேமிப்பும்

எல்லோருக்கும் மிகவும் முக்கியமானதும் , எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டியதும் தான் இந்த சிக்கனமும் , சேமிப்பும் .சிக்கனமாக இருந்தால் தான் வாழ்க்கையில் முன்னேற முடியும் . இன்றே உழைத்த பணத்தை இன்றே செலவழித்தால் அதில் என்ன பயன் .சிக்கனம் என்பது வீட்டைக் காக்கும் . ஆனால், சேமிப்பு நாட்டைக் காக்கும் .

சிக்கனமாக இருக்க வேண்டும் என்பதற்க்காக உணவு உண்ணாமல் , நல்ல உடைகளை உடுக்காமல் இருப்பது என்று பொருள் அல்ல . நமது தேவைகளை நிறைவேற்றாமல் காசை சேமித்து வைப்பதில் பயன் ஏதும் இல்லை . இப்படி இருப்பது கஞ்சத்தனம் . அப்படி இருக்க கூடாது . அதாவது அவசியமான , அத்தியாவசியமான தேவைகளுக்கு மட்டும் செலவழித்து விட்டு மீதியை சேமித்து வைத்தல் என்பதே சிக்கனம் . பணத்தை வீண்விரயம் செய்யாமல் அவசியமானவற்றுக்கு மட்டும் செலவழிக்க வேண்டும் .

அன்றாட உழைப்பில் தான் நமது வாழ்க்கை ஓடுகிறது என்றால் சாப்பாட்டை மட்டும் உண்டு கொண்டு இருக்க முடியுமா . இல்லை எமக்கு வேறு தேவைகளும் இருக்கிறது .அன்றாடம் மூவாயிரம் ரூபாய் தான் சம்பளம் . இருந்தாப்போல் காச்சல் வந்து விட்டது மருந்து எடுக்க வேண்டும் . என்ன செய்வது . கொஞ்ச பணத்தை நமது கையிருப்பில் வைத்து இருந்தால் தான் வைத்தியரிடம் சென்று மருந்து எடுக்க முடியும் . சேமித்து கொஞ்ச பணம் கையிருப்பில் வைத்து இருந்தால் தான் உடனே உதவும் .

கஞ்சத்தனமாக இருப்போரும் உண்டு . தம்மிடம் எல்லா வசதி இருந்தும் மற்றவர்களை எதிர்பார்ப்பார்கள் . போதிய வசதி இருந்தும் தமது உறவுகளுக்கு கொடுத்து உதவ மாட்டார்கள் . தமது உறவுகள் உடல்நிலை சரியில்லாது கஷ்டப்பட்டு கொண்டு இருக்கும்போது பண உதவியோ , மனிதாபிமான உதவியோ செய்ய மாட்டார்கள் . இப்படியானவர்களிடம் பணம் இருந்தும் என்ன பயன் .



கஷ்டத்தில் உடுக்க உணவில்லாமல் , சாப்பிட வழியில்லாமல் இருக்கும் போது பண வசதி படைத்தவர்கள் தமது ஆடம்பர செலவுகளை செய்து தமது பணத்திமிரை காட்டுகிறார்கள் . சடங்குகள் , விழாக்கள் போன்றவற்றில் உணவுகள் தயாரிக்கப்பட்டு வீண் விரயம் ஆக்கப்படுகிறது , அளவுக்கு அதிகமான ஆடம்பரங்கள் என்று பணத்தை தண்ணீர் போல் வாரி இறைக்கிறார்கள் . கொஞ்ச நேரம் யோசித்து இவற்றை எல்லாம் சிந்திக்கிறார்களா . மற்றவர்களின் கஷ்டத்தையும் உணர வேண்டும் அவன் தான் மனிதன்.

மக்களிடம் சிக்கன பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும் அதன்மூலம் சேமிப்பை பெருக்க வேண்டும் . சிககனமும் சேமிப்பும் சோந்தால்தான் மூலதனம் பெருகும். சிறுவர்களுக்கு சின்ன வயதில் இருந்தே சேமிப்பு பழக்கம் ஏற்பட்டால் தான் எதிர்கால வாழ்வை வளமுடனும், வளர்ச்சியுடனும் அமைத்துக்கொள்ள முடியும். சிறு துளி தான் பேரு வெள்ளம் . சிக்கனம், மற்றும் சேமிப்பு என்பது பணத்தை மட்டும் சேமிப்பது மட்டுமல்ல. அதோடு நமது அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தப்படும் தண்ணீர், பெட்ரோல், மின்சாரம், காலநேரம், தானியங்கள், ஆகியவையும் அடங்கும். எனவே அனைத்து பொருட்களையும் சேமிக்க கற்றுக்கொள்ள வேண்டும். வீண்விரயம் செய்வதை தவிர்க்க வேண்டும் .

சிக்கனம் என்பது மற்றவர்களின் பட்டினியைக் கூடப் போக்கும். “வாழு வாழவிடு’ என்பதுதான் சிக்கனத்தின் தாரக மந்திரம். . தனி மனித வாழ்வில் மனிதனின் தரத்தை உயர்த்த சிக்கனமும், சேமிப்பும் மிக அவசியமானது . பெரியோர்களில் இருந்து சிறியோர்கள் வரை சிக்கனத்தை கடைப்பிடித்து சேமிக்க பழக வேண்டும் . சிக்கன பழக்கமும், சேமிப்பும், இளம் வயதில் ஏற்பட்டால் எதிர்காலத்தில் பொருளாதார நிலையில் உயர முடியும். அதன் காரணமாக தங்களது வாழ்வு வளம்பெறுவது மட்டுமல்லாமல் நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் பெருகும். நாம் சேமிக்கும் ஒவ்வொரு ரூபாயும் மருந்துகள் வாங்க குடிநீர் வசதி, பள்ளி வசதி, மருத்துவ வசதி ஆகிய அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க உதவுகிறது.

உடனே ஏதாவது மருத்துவ தேவைக்கு , அல்லது பள்ளிகூடத்து தேவைக்கு என உடனே பணம் தேவைப்பட்டால் நாம் சேமித்த பணத்தில் இருந்து உடனே அந்த தேவையை பூர்த்தி செய்யலாம் . சேமிப்பு இல்லாவிடில் எங்களுடைய நிலைமை என்னவாகும் . அங்கும் , இங்கும் அல்லலாடுவோம் . பக்கத்து வீட்டு கதவை தட்டி கடன் கேட்போம் . அது தவறு . நூறு ரூபாயை சம்பாதித்து தொண்ணூறு ரூபாயை செலவழித்து விட்டு பத்து ரூபாயை சேமிப்பது சிக்கனம் . அதே நூறு ரூபாயை வைத்து கொண்டு நூற்று பத்து ரூபாயை செலவழித்து விட்டு பத்து ரூபாய் கடன் வாங்குவது ஊதாரித்தனம் . அது தவறு

நாம் உழைத்து வாழ வேண்டும் . பிறர் உழைப்பில் வாழ்தல் ஆகாது . சிக்கனத்துடனும் சேமிப்புடனும் வாழ வேண்டும். நமது எதிர்காலம் சுபீட்சமாக இருக்கும் . சிக்கனமும் , சேமிப்பும் தான் வாழ்க்கையின் முதுகெலும்பு . எல்லோரும் சிக்கனத்துடனும் சேமிப்புடனும் இருந்தால் வாழ்வு வளம் பெறும், நாடு வளம் பெறும் .

# இந்திய இறக்குமதி பொருட்களுக்கு விதிக்கப்பட்ட அமெரிக்காவின் 50 சதவீத வரி அமலானது:

## பேச்சுவார்த்தைக்கான கதவுகள் திறந்திருப்பதால் பீதி அடைய வேண்டாம் என ஒன்றிய அரசு தகவல்

இந்திய இறக்குமதி பொருட்களுக்கு விதிக்கப்பட்ட அமெரிக்காவின் 50 சதவீத வரி முழுமையாக நேற்று அமலுக்கு வந்தது. இதனால் ஏற்றுமதி கடுமையாக பாதிக்கப்படும் என கணிக்கப்படும் சூழலில், பேச்சுவார்த்தைக்கான கதவுகள் திறந்திருப்பதால் பீதி அடைய தேவையில்லை என ஒன்றிய அரசு வட்டாரங்கள் கூறி உள்ளன. இந்திய இறக்குமதி பொருட்களுக்கு 25 சதவீத பரஸ்பர வரியை விதித்த அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், ரஷ்யாவிடம் இருந்து மோடி அரசு அதிகளவு கச்சா எண்ணெய் வாங்கி கொள்ளை லாபம் சம்பாதிப்பதாக குற்றம்சாட்டி கூடுதலாக 25 சதவீத வரியை விதித்தார். இதில், 25 சதவீத பரஸ்பர வரி கடந்த 7ம் தேதி அமலுக்கு வந்த நிலையில், கூடுதல் 25 சதவீத வரி தொடர்பாக ஒப்பந்த பேச்சுவார்த்தை நடத்த 21 நாள் காலஅவகாசம் வழங்கினார். ஆனால், விவசாயிகள், கால்நடை வளர்ப்பவர்கள், சிறு தொழில் செய்வோரின் நலன்களில் சமரசம் செய்ய முடியாது எனக் கூறிய பிரதமர் மோடி, 'எங்கள் மீதான அழுத்தம் அதிகரித்தாலும், நாங்கள் அதை தாங்கிக் கொள்வோம்' என அறிவித்தார். இந்நிலையில், டிரம்ப் விதித்த கூடுதல் 25 சதவீத வரி நேற்று அமலுக்கு வந்தது.

கூடுதல் வரி ஆகஸ்ட் 27ம் தேதி அதிகாலை 12.01 மணிக்கு அமலுக்கு வந்ததாக அமெரிக்காவின் உள்நாட்டு பாதுகாப்பு துறை அறிவித்தது. இதன் மூலம் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் இந்திய பொருட்களுக்கு இனி 50 சதவீதம் வரி செலுத்த வேண்டும். உலகில் எந்த நாட்டிற்கும் இவ்வளவு அதிக வரியை அமெரிக்கா விதிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவின் 50 சதவீத வரி விதிப்பு இந்திய வெளியுறவுக் கொள்கையின் தோல்வியை காட்டுவதாக காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கடுமையாக சாடி உள்ளார். இந்த வரியால் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 1 சதவீதம் பாதிக்கப்படக் கூடும் என்றும், அதன் மூலம் சீனா பயனடையும் என்றும் சர்வதேச வர்த்தக




ஆராய்ச்சி அமைப்பு (ஜிடிஆர்ஐ) எச்சரித்துள்ளது. சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் உட்பட ஏற்றுமதி சார்ந்த பல முக்கிய துறைகள் பெரும் வேலைவாய்ப்பை இழக்கும் அபாயமும் உள்ளது. இந்திய ஜவுளி ஏற்றுமதி துறையானது நேரடியாக மற்றும் மறைமுகமாக 5 லட்சம் வேலை இழப்புகளை சந்திக்க உள்ளது. ரத்தினக் கற்கள் மற்றும் நகைத் துறையில் 1.5 லட்சம் முதல் 2 லட்சம் வேலைகள் ஆபத்தில் இருக்கக்கூடும்.

ஏற்கனவே 10 சதவீத அடிப்படை வரியை அமெரிக்கா கடந்த ஏப்ரல் மாதத்தில் அமல்படுத்தியதில் இருந்து சவுராஷ்டிரா பிராந்தியம் முழுவதும் வைரம் வெட்டுதல் மற்றும் பாலிஷ் செய்வதில் ஈடுபட்டுள்ள சுமார் 1 லட்சம் தொழிலாளர்கள் வேலை இழந்துவிட்டனர். 5 லட்சம் இறால் விவசாயிகளின் வாழ்வாதாரம் நேரடியாக பாதிக்கப்பட்டிருப்பதோடு, 2.5 லட்சம் பேர் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தியாவின் தேச நலனே மிகவும் முக்கியமானது. வலுவான வெளியுறவுக் கொள்கைக்கு திடமும், திறமையும் அவசியம்.

ஆனால், புன்னகை, கட்டி பிடித்தல் மற்றும் செல்பிகள் என்கிற உங்கள் மேலோட்டமான வெளியுறவுக் கொள்கை நாட்டின் நலன்களை பாதித்துள்ளன. நீங்கள் ஒரு வர்த்தக ஒப்பந்தத்தை அடைவதில் தோல்வியடைந்தீர்கள். இதன் மூலம் நாட்டை பாதுகாக்கத் தவறிவிட்டீர்கள். இவ்வாறு கார்கே குற்றம்சாட்டி உள்ளார். இதற்கிடையே, ஒன்றிய அரசு தரப்பில் நேற்று வெளியான தகவலில், 'இந்தியாவின் ஏற்றுமதிகள் பன்முகத்தன்மை கொண்டது என்பதால் அமெரிக்காவின் வரியினால் ஏற்படும் தாக்கம் பயப்படுவதை போல கடுமையாக இருக்க வாய்ப்பில்லை. மேலும், இந்தியா, அமெரிக்கா இடையே பேச்சுவார்த்தைக்கான கதவுகள் திறந்திருக்கின்றன. வரிப் பிரச்னையை தீர்க்க முயற்சிகள் தொடரும். எனவே ஏற்றுமதியாளர்கள் பீதி அடையத் தேவையில்லை. இந்தியா, அமெரிக்கா இடையேயான நீண்ட கால உறவில் இது ஒரு தற்காலிக சிக்கல் மட்டுமே' என கூறப்பட்டுள்ளது. இந்தியா தற்போது 220க்கும் மேற்பட்ட நாடுகளுடன் வர்த்தக உறவை கொண்டுள்ளது. இதில், அமெரிக்காவின் 50 சதவீத வரி பாதிப்பை ஈடுகட்ட இங்கிலாந்து, ஜப்பான், ஜெர்மனி உள்ளிட்ட 40 முக்கிய நாடுகளுடன் வர்த்தகத்தை பெருக்குவதற்கான முயற்சிகள் எடுக்க முடிவு செய்துள்ளது.

தி ஆசியா குழுமத்தின் மூத்த ஆலோசகர் மார்க் லின்ஸ்காட் கூறுகையில், "அமெரிக்காவின் வரிகளின் குறுகிய கால தாக்கம் சந்தேகத்திற்கு இடமின்றி கடுமையானதாக இருக்கும். பிரதமர் மோடியும், அதிபர் டிரம்பும் நேரடியாக பேசி ஒப்பந்தத்திற்கு வாய்ப்புகளை ஏற்படுத்தினால் மட்டுமே இதற்கு தீர்வு காண முடியும்" என்றார். ஆசிய குழுமத்தின் நிர்வாகத் தலைவர் பசந்த் சங்கேரா கூறுகையில், "மோடி, டிரம்ப் இடையே நேரடி பேச்சுவார்த்தை நடக்காத வரையிலும் இருதரப்பு வர்த்தக உறவு மந்தநிலையிலேயே இருக்கும். இது இந்தியாவுக்கு மேலும் அதிக சேதத்தை ஏற்படுத்தும் அபாயமும் உள்ளது" என்றார். (ஐ)



# 7 ஆண்டுக்கு பிறகு பயணம் ஆகஸ்ட் 31ல் சீன அதிபரை சந்திக்கிறார் பிரதமர் மோடி

ஏழாண்டுக்கு பிறகு முதல் முறையாக சீனாவுக்கு பிரதமர் மோடி பயணம் மேற்கொள்கிறார். ஆகஸ்ட் 31ம் தேதி சீன அதிபர் ஜி ஜின்பிங்கை பிரதமர் மோடி நேரில் சந்தித்து பேச்சு நடத்த உள்ளார்.

சீனாவின் தியான்ஜினில் ஆகஸ்ட் 31ம் தேதி நடக்க உள்ள ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மாநாட்டில் பிரதமர் மோடி பங்கேற்க உள்ளார். இதனால், அவர் 7 ஆண்டுக்கு பிறகு முதல் முறையாக சீனாவுக்கு பயணம் மேற்கொள்கிறார். அவர் சீன அதிபர் ஜி ஜின்பிங்குடன் இரு தரப்பு உறவுகள் தொடர்பான சந்திப்பை நடத்துவார்.

இந்த சந்திப்பில், இந்தியா-சீனா உறவுகளை வலுப்படுத்த ஆலோசனை நடக்கும் என தெரிகிறது. இந்திய பொருட்களுக்கு அமெரிக்கா அதிக வரி விதிப்பு காரணமாக இரு நாடுகளுக்கும் இடையே சீர்கெட்டுள்ளது. இதனால் இந்த சந்திப்பு உலகம் முழுவதும் இந்தியா - சீனா இடையிலான சந்திப்பு உன்னிப்பாகக் கவனிக் கப்படுகிறது . ஆகஸ்ட் 31ம் தேதி முதல் செப்டம்பர் 1ம் தேதி வரை நடைபெறும் இரண்டு நாள் உச்சி மாநாட்டில், ரஷ்ய அதிபர் புடின் உட்பட 20க்கும் மேற்பட்ட உலக நாடுகளின் பங்கேற்கின்றனர். மத்திய ஆசியா, மத்திய கிழக்கு, தெற்காசியா மற்றும் தென்கிழக்கு ஆசியாவைச் சேர்ந்த தலைவர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்

2020ம் ஆண்டு எல்லை மோதல்களைத் தொடர்ந்து பதட்டங்களைத் தணிக்க, இந்தியாவும், சீனாவும் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வரும் நிலையில், ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு மோடியின் முதல் சீனப் பயணம் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஹிமாச்சலில் நிலச்சரிவில் சிக்கி 4 பேர் உயிரிழப்பு 2 பேர் மாயம்

ஹிமாச்சல பிரதேசத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 4 பேர் உயிரிழந்தனர். மேலும், மாயமான 2 பேரை தேடும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் 20ம் தேதி முதல் ஹிமாச்சல பிரதேசத்தில் கனமழை கொட்டித் தீர்த்து வருகிறது. இங்குள்ள மலை மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி இதுவரையில் 158 பேர் உயிரிழந்துள்ளனர். 38 பேர் மாயமாகியுள்ளனர். இதுவரையில் 90க்கும் மேற்பட்ட இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. 42 இடங்களில் மேகவெடிப்பும், 85 இடங்களில் பெரிய அளவில் நிலச்சரிவும் ஏற்பட்டுள்ளது. இதனால், சுமார் ரூ.2,600 கோடி சொத்துக்கள் சேதமடைந்துள்ளன.

அதிகபட்சமாக சாம்பா மாவட்டத்தில் ஒரே இரவில் 51 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது. ஹிமாச்சலில் குறிப்பிட்ட பகுதிகளில் ஆக.,31 வரை கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த நிலையில், ஹிமாச்சல பிரதேசத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 4 பேர் உயிரிழந்தனர். மேலும், 2 பேர் மாயமடைந்தனர். பசோந்தான் கிராமத்தில், ஒரு மலை சரிவைக் காண வெளியே சென்ற அண்ணன், தங்கை நிலச்சரிவில் சிக்கி, மண்ணுக்குள் புதையுண்டனர். அதேபோல, மெஹ்லாவில், இரு தனித்தனி நிலச சரிவுகளில் சிக்கி மேலும் 2 பெண்கள் பலியாகினர். அதேபோல, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதியில் இன்னும் 2 பேரை காணவில்லை என அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். அவர்களை தேடும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது. (ஐ)



## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஏற்பாட்டில் வடக்கு, கிழக்கு பகுதிகளில் இந்தப் போராட்டம் இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதற்கமைவாக வவுனியா – இலுப்பையடிப் பகுதியியிலும் கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள், அரசியல் கட்சி பிரமுகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு சர்வதேச நீதி கோரி கையொப்பம் இட்டனர்.

## முல்லைத்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முல்லைத்தீவு நகரில் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் ஞா.ஜூட்சன் தலைமையில் இன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்தக் கையெழுத்திடும் செயற்பாட்டில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் கந்தையா சிவனேசன், கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் சி.லோகேஸ்வரன், முன்னாள் கரைதுறைப்பற்று தவிசாளர் க.விஜிந்தன், மாந்தை கிழக்கு உப தவிசாளர் வரதன் , பிரதேச சபை உறுப்பினர்களான அமலன், பவுள்ராஜ், குணம் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர்கள், கட்சி உறுப்பினர்கள், பங்குத் தந்தையர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தார்கள்.

## நாவற்குழியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இன்று வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் தவணையிடப்பட்ட போதிலும் நீதிவான் வருகை தராத காரணத்தால் மீண்டும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 24ஆம் திகதி தீர்ப்புக்காகத் தவணையிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட தரப்பின் சட்டத்தரணி அம்பிகா சிறிதரன் கருத்துத் தெரிவிக்கையில்,

“கடந்த 1996ஆம் ஆண்டு நாவற்குழியில் இடம்பெற்ற இராணுவச் சுற்றிவளைப்பின் பின் காணாமல்போன 24 நபர்களில் மூன்று பேர் தொடர்பிலான ஆட்கொணர்வு மனு 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு சில வருடங்களாக மூன்று வழக்குகளும் விசாரணைக்காக சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் இடம்பெற்று தற்போது தீர்ப்புக்காகத் தவணையிடப்பட்டுள்ளது.

இன்று நீதிவான் வருகை தராத காரணத்தால் மேற்படி வழக்கு தீர்ப்புக்காக எதிர்வரும் ஒக்டோபர் 24ஆம் திகதிக்குத் தவணையிடப்பட்டுள்ளது.” - என்றார்.

## ராஜித விளக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் தொடர்பில் தன்னைக் கைது செய்யுமாறு பிறப்பிக்கப்பட்ட பிடியாணை உத்தரவைத் தற்காலிகமாக இரத்துச் செய்யுமாறு கோரி முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

ஆனால், முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவின் மனுவை நீதிமன்றம் நிராகரித்தது.

இந்நிலையில், முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன கொழும்பு மேல் நீதிமன்றில் இன்று காலை ஆஜராகியமை குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிலையில், மற்றையவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# அத்துரலிய ரத்ன தேரர் செப். 12 வரை மறியலில்

கொழும்பு, ஓக. 29

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரரை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நுகேகொடை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அத்துரலிய ரத்ன தேரருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் தலைமறைவாகியிருந்த அவர் இன்று நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

# வீடு திரும்பினார் ரணில்

கொழும்பு, ஓக. 29

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று வெள்ளிக்கிழமை மீண்டும் வீடு திரும்பியுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

வைத்தியசாலையில் இருந்து வெளியேறினாலும் ரணில் விக்கிரமசிங்க வீட்டில் தொடர்ந்து ஓய்வு எடுக்க வேண்டும் என்று வைத்தியர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர். அத்துடன், ரணில் விக்கிரமசிங்கவின் உடல் நிலை குறித்து அவரது குடும்ப வைத்தியர் கண்காணிப்புடன் இருத்தல் வேண்டும் என்றும் வைத்தியர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர். ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில், தனது மனைவியான பேராசிரியர் மைத்ரி விக்ரமசிங்கவின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்வதற்காக இலண்டனுக்குத் தனிப்பட்ட விஜயம் செய்வதற்காக அரச நிதியைத் தவறாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகளால் கடந்த 22 ஆம் திகதி பிற்பகல் கைது செய்யப்பட்ட நிலையில் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் அவரை கடந்த 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதனையடுத்து, உயர் இரத்த அழுத்தம் மற்றும் அதிக சர்க்கரை அளவு காரணமாக மருத்துவ ஆலோசனையின் பேரில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் உடல்நலக் குறைவு காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

பின்னர், ரணில் விக்கிரமசிங்க உடல்நலக் குறைவு காரணமாக நீதிமன்ற உத்தரவின் பேரில் கடந்த 26 ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் இனப் படுகொலைகளுக்கு சர்வதேச நீதி கோரி கையெழுத்துப் போராட்டம்!

இனப் படுகொலைகளுக்கு சர்வதேச நீதி கோரி கையெழுத்துப் போராட்டம் ஒன்று மன்னார் நகர பேருந்து தரிப்பிடத்தில் இன்றையதினம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டம் தமிழ் தேசிய கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கருத்து வெளியிடுகையில்,

ஐ.நா. சபையின் கதவை தட்டியது மக்களின் மற்றும் போராளிகளின் தியாகம் என்பதை நாம் ஒருபோதும் மறக்க முடியாது.

இன்று வடக்கு, கிழக்கில் எங்கு தோண்டினாலும் தமிழர்களின் எலும்புக்கூடுகள் வெளிவருகின்றன. பல்வேறு இடங்களில் மனித புதைகுழிகள் காணப்படுகின்றன.

முதன்முதலாக மனித எலும்புக்கூடுகள் மன்னாரில் கண்டுபிடிக்கப்பட்டன. பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்தில் மனித புதைகுழி கண்டறியப்பட்டது.

தற்போது யாழ்ப்பாணத்தில் அதிகளவு மனித எலும்புக்கூடுகளுடன் கூடிய புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தாய் ஒருவர் தனது பிள்ளையை கட்டிப்பிடித்த நிலையில் உள்ள எலும்புக்கூடுகளும் கண்டறியப்பட்டுள்ளன.

இவற்றைப் பார்க்கும்போது மனதில் வேதனை ஏற்படுகிறது. மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களை தண்டிக்கும் வகையில் சர்வதேச நீதிமன்றத்தில் தண்டனை வழங்குவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

மன்னார் மறைமாவட்டத்தின் முன்னாள் ஆயர் அமரர் இராயப்பு யோசேப்பு, இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்ட மக்களின் உண்மையான எண்ணிக்கை ஐ.நா. சபை வரை சென்றதாக கூறியிருந்தார். இன்று வரை அவரது எண்ணிக்கையே அங்கு பதிவாகியுள்ளது.

அவ்வாறான சூழலில், ஆயர் கூறியவாறு, ‘கள்ளர்கள் கள்ளர்களை விசாரிக்க முடியாது’ என்பது போல, எமது இனத்தை அழித்தவர்கள், உறவுகளை காணாமல் ஆக்கியவர்கள், இனத்தை இல்லாது செய்யும் எண்ணத்துடையவர்கள், அதற்கு எதிரான விசாரணைகளை முன்னெடுக்க அருகதையற்றவர்கள் என்பதை நாங்கள் உணர்ந்துள்ளோம்.

இந்த கையெழுத்து இயக்கம் ஐ.நா. வரை சென்று எமக்கு நீதியாக மாற வேண்டும். எமது உறவுகளுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காக இந்த இயக்கத்தை ஆரம்பித்துள்ளோம்.

வடக்கில் இன்று (29) இந்த கையெழுத்து இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது. கிழக்கில் வேறொரு தினத்தில் இது நடைபெறும். ஆயிரக்கணக்கான கையெழுத்துக்களை பெறுவதன் மூலம் எமது இலக்கை அடைய முடியும். இதன் மூலம் எமது கோரிக்கையை சர்வதேசத்திற்கு தெரிவிக்க முடியும்- என அவர் தெரிவித்திருந்தார்.

குறித்த கையெழுத்து போராட்டத்தில் அருட் தந்தையர்கள், உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள், பொது மக்கள், மனித உரிமை செயல்பாட்டாளர்கள் உள்ளடங்களாக பலரும் கலந்து கொண்டு கையெழுத்திட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# முத்துநகர் விவசாயிகள் ஐவருக்கு விளக்கமறியல்




திருகோணமலை சீனக்குடா பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு திருகோணமலை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட முத்துநகர் விவசாயிகள் 5 பேரை எதிர்வரும் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் வியாழக்கிழமை (28) உத்தரவு பிறப்பித்துள்ளது.

திருகோணமலை முத்து நகர் பகுதியில் இடம்பெற்ற வன்முறை சம்பவம் தொடர்பில் சீனக்குடா பொலிஸாரினால் முத்து நகர் பகுதியைச் சேர்ந்த 6 பேர் புதன்கிழமை (27) சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்தனர்.

குறித்த சந்தேக நபர்களை வியாழக்கிழமை (28) நீதிமன்றில் முன்னிலைபடுத்திய போது ஒருவருக்கு பிணை வழங்கப்பட்டதுடன் ஏனைய 5 பேரையும் எதிர்வரும் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. முத்துநகர் விவசாயிகள் விவசாயம் செய்து வந்த காணியில் இந்திய சோலார் நிறுவனம் ஒன்றினால் வேலைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த நிலையில் குறித்த வன்முறைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறித்த சம்பவம் இடம்பெற்ற இடத்தில் இலங்கைத் துறைமுக அதிகார சபையின் ஊழியர்கள் மற்றும் சோலார் நிறுவனத்தினுடைய ஊழியர்கள் இருந்ததாகவும் தெரிய வருகிறது.

திருகோணமலை சீனக்குடா பொலிஸ் நிலையத்திற்கு குறித்த சம்பவம் தொடர்பில் புதன்கிழமை (27) முறைப்பாடு பதிவு செய்ய சென்ற விவசாயிகள் 3 பேரும் வீட்டில் இருந்த 3 பேருமே பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு வியாழக்கிழமை (28) நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

முத்துநகர் விவசாயிகள் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த காணிகளில் சிலர் கனரக வாகனங்களை கொண்டு அத்துமீறி நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக அறிந்த விவசாயிகள் அங்கு சென்று அங்கிருந்த நபர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகவும் இந்நிலையில் இரு தரப்பினருக்கும் இடையே கல்வீச்சு தாக்குதல் இடம்பெற்றதாகவும் தெரிய வருகிறது. குறித்த சம்பவத்தில் காயமடைந்த விவசாயிகள் சிலர் சீனக்குடா பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு செய்வதற்காக மதியத்தில் இருந்து மாலை வரை காத்திருந்த போது பொலிஸார் முறைப்பாட்டை பெற்றுக் கொள்ளாமல் விவசாயிகளை கைது செய்துள்ளதாகவும், இந்நிலையில் விவசாயி ஒருவர் காயமடைந்த நிலையில் கிண்ணியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கின்றனர். இதேவேளை மற்றைய தரப்பைச் சேர்ந்த நபர் ஒருவரும் காயமடைந்த நிலையில் திருகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

முத்துநகர் விவசாயிகள் நீண்டகாலமாக விவசாயம் மேற்கொண்டு வந்த காணிகளில் இருந்து சில விவசாயிகள் அண்மையில் நீதிமன்றத்தின் மூலம் வெளியேற்றபட்டிருந்தனர். இருப்பினும் ஏனைய காணிகளில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட முடியும் என பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா அறிக்கை வெளியிட்டு இருந்ததாகவும் ஆனால் ஏனைய காணிகளும் இந்திய நிறுவனத்திற்கு சூரிய சக்தி மின் திட்டத்திற்காக வழங்கப்பட்டு வேலைகள் இடம்பெற்று வருவதாகவும் விவசாயிகள் மேலும் தெரிவிக்கின்றனர்.








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.08.2025 வெளியிடப்பெற்றது.